## October 25, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உக்ரைனுக்கு அமெரிக்கா டாமஹாக் ஏவுகணைகளை வழங்கினால் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் எச்சரித்தார். இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
   i. உக்ரைனுக்கு அமெரிக்கா டாமஹாக் ஏவுகணைகளை அளிக்கக்கூடாது. அப்படி ஏவுகணைகள் அனுப்பப்பட்டு, அவை மூலம் ரஷிய நிலங்கள் தாக்கப்பட்டால், அதற்கான பதிலடி மிகவும் கடுமையானதாக இருக்கும். எனவே, இந்த விவகாரத்தில் அமெரிக்கா சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்றார் அவர்.
   ii. 1,500 கி.மீ. தொலைவில் உள்ள இலக்குகளை மிகத்துல்லியமாகத் தாக்கும் நீண்டதூர, வழிகாட்டப்படும் க்ரூஸ் ரக ஏவுகணையான டாமஹாக்கை உக்ரைன் நீண்ட காலமாகவே அமெரிக்காவிடம் கோரி வருகிறது.
2. குழந்தைகளுக்கான புனைக் கதைகள் பிரிவில் புதிய புக்கர் பரிசு வழங்கப்பட உள்ளதாக புக்கர் பரிசு அறக்கட்டளை அறிவித்தது.
   i. 50,000 பவுண்ட் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.58.49 லட்சம்) பரிசுத் தொகைக்கான புத்தகத்தை குழந்தைகள் மற்றும் மூத்த எழுத்தாளர்கள் அடங்கிய நடுவர் குழு தேர்வு செய்யும் என அந்த அறக்கட்டளை தெரிவித்துள்ளது.
   ii. ஆங்கில இலக்கியத்தில் மிக உயரிய பரிசாகக் கருதப்படும் புக்கர் பரிசு கடந்த 1969-ஆம் ருந்து வழங்கப்படுகிறது. இதைத் தொடர்ந்து, சர்வதேச புக்கர் பரிசு 2005-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. இந்நிலையில், குழந்தைகளுக்கான புத்தங்கள் பிரிவில் புதிய பரிசை புக்கர் பரிசு அறக்கட்டளை அறிவித்துள்ளது.
   iii. முதலாவது குழந்தைகளுக்கான புத்தங்கள் புக்கர் பரிசு பரிந்து ஆண்டிலிரைக்கான விண்ணப்பம் அடுத்த ஆண்டில் தொடங்கும். அதைத் தொடர்ந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட எழுத்தாளர்களில் இருந்து வெற்றி பெற்றவர் 2027-ஆம் ஆண்டில் அறிவிக்கப்படுவார்.
   iv. நிகழாண்டுக்கான சர்வதேச புக்கர் பரிசு கன்னட எழுத்தாளர் பானு முஷ்டாக் எழுதி தீபா பாஸ்தி மொழிபெயர்த்த 'ஹார்ட் லேம்ப்' புத்தகத்துக்கு வழங்கப்பட்டது.
3. செஷல்ஸ்புதிய அதிபர் பேட்ரிக் ஹெர்மினி பதவியேற்பு விழாவில் இந்தியா சார்பில் பங்கேற்பதற்காக, அந்நாட்டுக்கு இரண்டு நாள்கள் பயணமாக குடியரசு துணைத் தலைவர் சி.பி.ரா தாகிருஷ்ணன் ஞாயிற்றுக்கிழமை (அக்.26) செல்லவிருக்கிறார்.
   i. செஷல்ஸ் அரசின் அழைப்பின்பேரில் இப்பயணத்தை அவர் மேற்கொள்வதாக, இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
   ii. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான செஷல்ஸ், மத்திய அரசின் 'மகாசாகர்' தொலைநோக்குப் பார்வை மற்றும் தெற்குலக உறுதிப் பாட்டில் முக்கியக் கூட்டாளியாகும். அந்நாட்டுடனான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளது.
4. இந்திய விளம்பரம் தயாரிப்பு துறையின் ஜாம்பவான் பியூஷ் பாண்டே (70) உடல்நலக் குறைவால் மும்பையில் காலமானார்.
5. தீபாவளியை முன்னிட்டு - மத்திய பிரதேசத்தின் போபால் மற்றும் விதிஷா மாவட்டங்களில் கார்பைடு குழாய் துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதில் காயமடைந்த 100-க்கும் அதிகமானோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் 8 முதல் 14 வயது வரையிலான குழந்தைகள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
   i. பிளாஸ்டிக் (பிவிசி) குழாய்களில் கால்சியம் கார்பைடு ரசாயனத்தை அடைத்து

இந்த வகையான துப்பாக்கி தயாரிக்கப்படுகிறது. இது பெரிய அளவில் வெடிப்பு சப்தத்தை உருவாக்குவதால் தீபாவளியை யொட்டி பயன்படுத்தப்படுகிறது.

ii. கால்சியம் கார்பைடு நீருடன் வேதிவினைபுரியும்போது அசிட்டிலீன் என்னும் வாயு உருவாகிறது. இந்த வாயு தீப்பொறியுடன் தொடர்பு கொள்ளும்போது பெரும் சப்தத்துடன் வெடிக்கிறது.

iii. அந்த நேரத்தில், குழாய் வெடிக்கும் போது அதிலிருந்து வெளியேறும் சிறிய பிளாஸ்டிக் பகுதிகள் அதைப் பயன்படுத்தும் நபரின் கண்கள், முகம், தோல் பகுதியில் பலத்த காயத்தை ஏற்படுத்துகின்றன.

6. உலக அளவில் ஒரு நாட்டின் பொருளாதார சக்கரச் சுழற்சியை இயங்கச் செய்வதிலும், நாட்டின் நிதிக் கட்டமைப்பின் வலிமையை நிர்ணயிப்பதிலும் அந்நாட்டிலுள்ள தங்கத்தின் கையிருப்புதான் முக்கியப் பங்காற்றுகிறது. எனவேதான், ஒரு நாடு பொருளாதார சிக்கலில் சிக்கித் தவிக்கும் போதும், கடன் சுமை அதிகரிக்கும் போதும், தங்கத்தை விற்று நெருக்கியயைச் சமாளித்து வருகிரது. உலகலாவிய பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு அடிக்கல்லாக, பாதுகாப்பு கவசமாக தங்கம் விளங்குகிறது.

i. அன்றைய துருக்கியின் பகுதியான லிடியாவில் குரோசஸ் மன்னரின் காலத்தில் (கி.மு.561) முதல்முதலில் தங்க நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, எல்லா சொத்துகளையும் விட உலகில் அதிகமாகப் பரிமாற்றம் செய்யப்படும் பொருளாகத் தங்கம் விளங்குகிறது. அமெரிக்காவின் பங்குச் சந்தைக்கு அடுத்தபடியாக மிக அதிகமான வர்த்தகம் தங்கத்துக்காக நடைபெறுகிறது. காரணம், தங்கம் வழங்கும் பாதுகாப்பை எந்த முதலீடும் வழங்குவது இல்லை.

ii. லண்டனில் செயல்படும் உலக தங்க சபை (வேர்ல்ட் கோல்ட் கவுன்சில்) கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியிட்ட பட்டியலின் படி, உலகில் அதிகம் தங்கம் வைத்திருக்கும் நாடுகளில், வழக்கம்போல் அமெரிக்கா தன் கையிருப்பில் 8,133 டன் தங்க கையிருப்புடன் முதலிடத்தில் உள்ளது. இத்தகைய பெரும் தங்க இருப்புதான், அதன் நாணயத்துக்கு (டாலர்) சர்வதேச சந்தையில் அதிக நம்பிக்கையை உருவாக்குகிறது.

iii. இந்தப் பட்டியலில் அடுத்த ஏழு இடங்களில் முறையே ஜெர்மனி (3,351 டன்), இத்தாலி (2,451 டன்), பிரான்ஸ் (2436 டன்), ரஷியா (2,333 டன்), சீனா (2,292 டன்), ஸ்விட்சர்லாந்து (1,040 டன்) ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியா 880 டன் தங்கத்துடன் எட்டாவது இடத்தில் உள்ளது. இந்த தங்க கையிருப்பே, இந்தியாவின் அந்நிய செலாவணியைப் பாதுகாக்க உதவுகிறது. உலக தங்க சபையின் தரவுகளின்படி, உலகின் மொத்த தங்க தேவையில், இந்தியா 26 சதவீத பங்கு வகிக்கிறது.

iv. திடீரென ஒரு நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைந்தால், தங்கத்தை விற்று அந்த நெருக்கடியைச் சமாளிக்கலாம். சந்திரசேகர் இந்திய பிரதமராக 10.11.1990 முதல் 21.06.1991 வரை 223 நாள்கள் மட்டுமே பதவி வகித்தார். இவரது ஆட்சிக் காலத்தில், 1991-ஆம் ஆண்டு மே மாதத்தில், நாட்டின் அந்நியச் செலாவணி நெருக்கடியை சமாளிக்கவும், வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய கடன்களைச் செலுத்தவும், இறக்குமதியைக் கையாளவும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (ஐஎம்எஃப்) கடன் பெறவும். 47 டன் தங்கம் பாங்க் ஆஃப் இங்கிலாந்திடமும், மீதமுள்ள 20 டன் தங்கம் பாங்க் ஆஃப் ஸ்விட்சர்லாந்திலும் அடமானம் வைக்கப்பட்டு நாட்டின் பொருளாதாரம் மீட்டெடுக்கப்பட்டது.

v. பின்னர், இந்திய பிரதமராக நரசிம்ம ராவ் இருந்த போது, அதே ஆண்டில் 47 டன் தங்கத்தை இங்கிலாந்து வங்கி, ஜப்பான் வங்கியிலும், 20 டன் தங்கத்தை

ஸ்விட்சர்லாந்து யூனியன் வங்கியிலும் அடமானம் வைத்து, இந்தியப் பொருளாதாரம் திவாலாகாமல் தடுக்கப்பட்டது.

vi. அவசர, அவசிய, ஆபத்துக் காலங்களில் தங்கம் உடனடியாக மக்களின் பணப்புழக் கத்துக்கு உதவுகிறது.

vii. உலக அளவில் தங்கம் வாங்கும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

viii. இந்திய ரிசர்வ் வங்கியின் தங்க கையிருப்பு முதல்முறையாக 100 பில்லியன் டாலரை தாண்டியுள்ளது. ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, தற்போது ரூ.8,97,000 கோடி (102.3 பில்லியன் டாலர்) தங்க கையிருப்பு உள்ளது. மேலும், இந்திய ரிசர்வ் வங்கியின் அந்நியச் செலாவாணி கையிருப்பில் இது 14.7 சதவீதமாகும்.

7. பிஎம் ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தில் இணைய மத்திய அரசுடன் கேரள அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்ட விவகாரம், அந்த மாநிலத்தில் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி கூட்டணியில் கருத்துவேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளது.

i. தங்களுக்குத் தெரிவிக்காமல் கேரள அரசின் கல்வித் துறை மத்திய அரசுடன் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டது என்றும் இது கூட்டணியின் கூட்டு ஒழுங்கை மீறிய செயல் என்றும் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகச் சாடியுள்ளது.

ii. மேலும், இது தேசிய கல்விக் கொள்கையை கேரளத்தில் அமல்படுத்த வழிவகுக்கும் என்றும் இந்திய கம்யூனிஸ்ட் எச்சரித்துள்ளது.

iii. பிஎம் ஸ்ரீ திட்டம் என்ன?: மத்திய அரசால் கடந்த 2022-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதி, கல்வித் தரத்தை உயர்த்துவது ஆகியவை இதன் முக்கிய நோக்கம். தேசிய கல்விக் கொள்கை செயல்படுத்தப்படுவதன் முன்மாதிரியாக இத்திட்டம் குறிப்பிட்ட பள்ளிகளைத் தேர்வு செய்து அறிமுகப்படுத்தப்படுகிறது. இதற்காக மத்திய அரசு பெருமளவில் நிதி ஒதுக்கி வருகிறது. தமிழகம் இத்திட்டத்தில் இணையவில்லை என்பதும், இணையாத மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்குவதில்லை என் பதும் குறிப்பிடத்தக்கது.

iv. மத்திய அரசின் நிதியைப் பெற கேரள அரசு எடுத்த வியூக முடிவு இது என்று கேரள கல்வித் துறை அமைச்சர் சிவன்குட்டி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், 'பிஎம் ஸ்ரீ திட்டத்தில் இணையாததால் கடந்த சில ஆண்டுகளில் ஒட்டுமொத்தமாக சுமார் ரூ.3,500 கோடியை கேரளத்துக்கு தராமல் மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதனால், அரசுப் பள்ளிகளில் படிக்கும் 40 லட்சம் மாணவர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர். இதில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளி மாணவர்களும் அடங்குவர். இதனால் மாணவர்களுக்கான இலவச பாடப் புத்தகம், சிறுமிகளுக்கான ஊக்கத் தொகை தொடங்கி ஆசிரியர்களுக்கான பயிற்சி வரை தடைபட்டது.

8. புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்காவை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். மேலும், பூங்காவுக் கான கட்டண விவரங்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

i. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம், 58 ஏக்கர் பரப்பைக் கொண்ட அடையாறு உப்பங்கழி சீரமைக்கப்பட்டு தொல்காப்பியப் பூங்கா ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பூங்காவுக்கு கடந்த 2008-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, 2011-ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கருணாநிதியால் திறக்கப்பட்டது.

ii. கடந்த காலத்தில் முறையான பராமரிப்பின்றி இருந்த தொல்காப்பியப் பூங்கா இப்போது மேம்படுத்தப்பட்டுள்ளது. ரூ.42.45 கோடியில் புனரமைப்பு செய்யப்பட்ட இந்த பூங்காவை, முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

9. மாமன்னர்கள் மருதுபாண்டியர்களின் 224-ஆவது நினைவு நாளை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் அவர்களது உருவச் சிலைகளுக்கு அமைச்சர்கள், அரசியல் கட்சியினர், பல்வேறு அமைப்பினர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

    i. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, முதல் போர் பிரகடனம் செய்து, சுதந்திரப் போராட்டத்துக்கு வித்திட்ட மருதுபாண்டியர்கள் கடந்த 1801, அக். 24-ஆம் தேதி பிரிட்டிஷாரால் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர். இவர்களது நினைவு நாள் அரசு விழாவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

10. அயர்லாந்தில் அடுத்த அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது.

    i. இந்தத் தேர்தலில் இடதுசாரி கட்சிகளின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர் கேதரின் கானலி மிகப்பெரிய வெற்றி பெறுவார் என்று கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

    ii. பாலஸ்தீனத்துக்கு ஆதரவான தீவிர நிலைப்பாடு, சமூக நீதிக்கான அர்ப்பணிப்பு, ஐரோப்பிய யூனியனை ராணுவமயமாக்கக் கூடாது என்ற கொள்கை ஆகியவற்றைக் கொண்ட கானலி, 2016 முதல் கால்வே வெஸ்ட் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.